# முற்றுப்பெறாத
# கவிதைகள்



நிலாந்தி சசிகுமார்

மகுடம்

# முற்றுப்பெறாத
# கவிதைகள்

நிலாந்தி சசிகுமார்

மகுடம்
இல.90, பார்வீதி,
மட்டக்களப்பு 30000
இலங்கை.

ISBN : 978 - 955 - 4041 - 09 - 7

**மகுடம் பதிப்பக வெளியீடு - 14**

• நூல் - முற்றுப்பெறாத கவிதைகள் • ஆசிரியர் - நிலாந்தி சசிகுமார் • உரிமை ஆசிரியருக்கு • முதல் பதிப்பு ஜனவரி - 2018 • பக்கம் - 80 • வெளியீடு - மகுடம் பதிப்பகம் 90, பார்வீதி, மட்டக்களப்பு. 30000 • தொ.பே. இல. 0774338878 • வடிவமைப்பு - அச்சு - வணசிங்கா அச்சகம், மட்டக்களப்பு. • விலை - 300/=

• Book - Mutru Peratha Kavithaikal • Author - Nilanthi Sasikumar • First Edition - January 2018 • Size - 1/8 • Page 80 • Published by - Magudam Publication. 90, Bar Road, Batticaloa. • Ph.No. 0774338878 • email - magudammichael@gmail.com • Printing - Wanasinghe Printers, Batticaloa • Price - 300/=

# சமர்ப்பணம்

என்னைப் பெற்றெடுத்த
என் அன்னை
திருமதி. வ.நவமணி அவர்கட்கும்
என்னை வளர்த்தெடுத்த
என்தந்தை
திரு. க.வல்லிபுரம் அவர்கட்கும்
என் உணர்வுகளுக்கு
வித்திட்ட என்
உறவுகள் அனைவருக்கும்

# அணிந்துரை

**த**மிழ் இலக்கியத்தின் வரலாறு ஏறத்தாழ 2000 ஆண்டுகள் என்று வைத்துக்கொண்டால் தமிழ்ப்பெண் தனது மன உணர்வுகளை வெளிப்படுத்தியது. மிக சில வேளைகளிலேதான். ஔவையார் முதலிய சங்கப்புலவர்கள் சிலர், சங்கமருவிய காலத்தில் ஒரு காரைக்காலம்மையார், பல்லவர் காலத்தில் ஒரு ஆண்டாள். அவ்வளவுந்தான்! ஆயினும் பிரக்ஞை பூர்வமாக, தமிழ்ப்பெண் - பெண்கள் - மௌனத்தைக் கலைத்தது 20ம் நூற்றாண்டிலேதான். இந்நூற்றாண்டில் ஈழத்தில் வெளிவந்த 'சொல்லாத சேதிகள்' (1986) ஊடாகத்தான் பெண்களின் மௌனக் கலைப்பிற்குச் சிறந்த இலக்கிய ஊடகமாக கவிதை இருந்தது என்பதே கவனிப்பிற்குரியது. கவிதையூடாக 2000 ஆண்டுகளாக அடக்கி ஒடுக்கப்பட்டிருந்த உணர்வுகள் பீறிட்டுக் கிளம்பின. எனவேதான் பெரும்பாலான கவிதாயினிகளின் கவிதைகள் 'தன்மை' நிலையில் வெளிப்படுகின்றன.

86ன் பின் ஈழத்தில் பல கவிதாயினிகள் தொடர்ந்து தம்மை இனங்காட்டி வருகின்றனர். வாசுகி குணரெட்ணம் போன்ற ஒரு சிலர் தமது தொகுப்புகளை வெளியிடாது இருந்து வருகின்றனர். வேறுசிலர் தமது கவிதைகளை தமக்குள் பூட்டி வைத்துக்கொள்கின்றனர். இவ்வளவு காலம் தமது மன உணர்வுகளை பூட்டி வைத்திருந்தது போன்று! அத்தகைய ஒரு இளங் கவிதாயினிதான் இத் தொகுப்பிற்குரிய நிலாந்தி சசிகுமார்.

தனது மன உணர்வுகளை வெளிப்படுத்த அவர் தேர்ந்தெடுத்த ஒரே ஒரு ஆயுதம் ஏனைய பலர் போன்று கவிதை என்ற ஊடகத்தைத்தான்.

என் கைகள் துடிக்கின்றன
கணகள் சொக்குகின்றன
தாகம்......
தாகம்......
பேனாவில் மையை ஊற்றுங்கள்
தொண்டையில் சிக்கிய கவிகள்
வெளியில் வந்து விழுட்டும்

என்ற முதற்கவிதை தொடக்கம் ஆங்காங்குள்ள சில கவிதைகளூடாக இது வெளிப்படுகின்றது. மனஉணர்ச்சிகளை மனப்போராட்டங்களை கனகச்சிதமாக வெளிப்படுத்த உதவுகின்ற தலை சிறந்த ஊடகம் முற்குறிப்பிட்டது போன்று கவிதைதான். ஆகவே இக் கவிதாயினியும் இதனைத் தேர்ந்தெடுத்தது இயல்பானதுதான்.

இத் தொகுப்பிலுள்ள கவிதைகளுள், ஒரு பெண் தன் இருப்பை இருப்பின் உண்மை நிலையை - வெளிப்படுத்தும் பாங்கில் எழுந்துள்ள கவிதைகளைப் பற்றி முதலிற் குறிப்பிட்டாக வேண்டும். உதாரணமாக

நான் இருக்கிறேன்
இன்னும் உயிருடன்
புன்னகை சிந்தும் கண்ணீராக
கண்ணீர் வடிக்கும் புன்னகையாக
கலைந்த கேசமாக
களையிழந்த மாலையாக
மறைக்கப்பட்ட சூரியனாக
பகல் நேரத்து நிலவாக
கை கால்கள் கட்டப்பட்ட குழந்தையாக
இன்னும் நான் இருக்கிறேன்.

என்ற கவிதையில் இன்றைய சராசரி தமிழ்ப்பெண்ணின் உண்மை நிலை மிக மிக நுட்பமான முறையில் சிறந்த படிமங்களூடாக - வெளிப்படுவதை அவதானிக்கின்றோம்.

ஏனைய கவிதைகளுள் சில காதலின் சிறப்பை - பிரிவை - ஏமாற்றத்தை - வலியை - எதிர்பார்ப்பை நுட்பமாக வெளிப்படுத்துகின்றன; மிக மிக இயல்பான முறையில் வெளிப்படுத்துகின்றன உதாரணமாக

காதல்
கண்களை வாயாக்கியது
வாயை ஊமையாக்கியது
மௌனத்தை கவிதையாக்கியது
கவிதையை தாய் மொழியாக்கியது
அழகை ஆராதித்து
அறிவைக் கொலை செய்தது.

இயற்கையை - இயற்கை தரும் அனுபவ விகசிப்பை - வெளிப் படுத்துகின்றன வேறு சில கவிதைகள்.

## கடலும் நானும்

உன்னுடனே என் கவியரங்கம்
நீ அலைக்கரம் தட்டி ரசிக்க
எனக்குப் போட்டியாக கவியை
நுரையாக அள்ளித் தெளிக்க
எமது கவிதைகளின் அரங்கேற்றம்

நீ சொல்வதும் நான் சிலிர்ப்பதும்
நான் சொல்வதும் நீ ரசிப்பதும்
தென்றல் எம்மை முதுகு தட்டிப்
பாராட்டும்

நீ ரசிப்பது எத்தனை விதம்
நான் சிலிர்ப்பது எத்தனை தரம்
நம் கவிதைகள் எத்தனை ரகம்

உன் உக்கிரமான கவிதைகளில்
நான் பின் வாங்குவதும்
என் சோகமான கவிதைகளில்
நீ பின் தங்குவதும்

என் காலடி வரும் ஒவ்வொரு
பொழுதும்
உன்னை பிடிக்க எத்தனிக்கிறேன்
உன் தப்பிச் செல்லும் யுக்தியைப் பார்த்து
நான் அசட்டுத் தனமாய் சிரிக்கிறேன்

தனிமையில் நீ நண்டுகளுடன் ஆடும்
கண்ணாமூச்சி
இரவில் நிலவுக்குச் சொல்லும்
காதல் கவிதைகள்
இவற்றை ரசிக்க கொடுத்து வைக்க வில்லை எனக்கு
ஒவ்வொரு முறை நான்
வரும் போதும்

என் கனவுகளின் அஸ்தியை
உன்னிடம் கரைத்து விட்டுச் செல்வதே
எனக்கு வேலையாகிவிட்டது........

என ஆரம்பித்துச் செல்லும் கவிதை இவ்விதத்தில் இத்தொகுப்பிலுள்ள சிறந்த கவிதைகளுள் ஒன்றாகின்றது.

இருப்பும் காதலும் இயற்கையும் பற்றி மட்டுமே இக்கவிதாயினியால் எழுத முடியும் என்பதில்லை. சமூக நோக்குடைய கவிதைகளும் எழுத முடியும். இன்றைய கல்வி முறைப்பற்றி நுட்பமாக பேசுகின்றது சிலுவைகள்.

தாம் சுமந்து செல்லும்
சிலுவைகளில் தான்
தாம் அறையப்படப்
போகிறோம் என்று
அறியாமல் பாடசாலை
செல்லும் தேவதைகள்

ஏறத்தாழ 30 ஆண்டுகளாக நடந்து முடிந்த சோகமான அரசியல் நாடகம் பற்றி, எடுத்துக் காட்டுகின்றது வெற்றி.

எம் நாட்டுப் பெண்களின்
கூந்தல் மலரைப்பறித்து
உம் மனைவியர் குழலை
அலங்கரித்தீர்கள்

எமது சுமங்கலிகளின்
குங்குமம் எடுத்து
உமது பெண்களின்
வகிட்டில் தீட்டினீர்கள்

எங்கள் குழந்தைகளின்
பொம்மைகள் பறித்து
உங்கள் குழந்தைகளுக்கு
விளையாட்டுக் காட்டினீர்கள்
இது தான் உங்கள் வெற்றி
என்றால் நாங்கள் தோற்றது
உண்மையே

விரைவில் நடக்கவுள்ள, வழமையாக அரங்கேறும் அரசியல் நாடகம் பற்றியது பின்வரும் கவிதை

வாக்குப்பெட்டி

கர்ப்பம் தரித்து விட்டேன்
என் வயிறு திறந்து
கொண்டு வாருங்கள்
ஒரு புதிய முகத்தை

ஆக, பெண்ணின் இருப்பில் ஆரம்பித்து ஈழத்து மண்ணின் இன்றைய சமூக, அரசியல் இருப்புவரை பல்வேறு விடயங்களை உணர்ச்சி பூர்வமான முறையில் வெளிப்படுத்தும் கவிதைகள் கொண்ட இத்தொகுப்பு எதிர்காலத்தில் மட்டக்களப்பில் - ஈழத்தில் - பிரகாசிக்கக் கூடியதொரு கவிதாயினியைத் தன்னுள் வைத்திருக்கின்றது என்று துணிந்து கூறலாம்.

இக்கவிதாயினியின் பலமும் பலவீனமும் மட்டுப்படுத்தப்பட்ட வாசிப்பை இவர் கொண்டுள்ளமைதான்! மிக இயல்பான முறையில் உணர்ச்சி வெளிப்படுவது பலமாகின்றது. சமகால சிறந்த கவிதாயினிகளின் வரிசையில் சேர்வதெனில் அதற்கான வலு போதாமலிருப்பது, பலவீனமா கின்றது "தன்னை" உணர்ந்த இக்கவிதாயினி அதனையும் 'உணர்ந்து' சோர்வின்றி பயணிக்க வேண்டுமென்பதே எமது எதிர்பார்ப்பாகின்றது! இளங் கவிதாயினி ஒருவரை அறிமுகப்படுத்திய மகுடமும் பாராட்டிற் குரித்தாகிறது.

வாழ்த்துக்களுடன்,
**பேராசிரியர் செ.யோகராசா**

# பதிப்புரை

மகுடம் பதிப்பகத்தின் பதினான்காவது வெளியீடாக கவிதாயினி நிலாந்தி சசிகுமார் (அந்திநிலா) அவர்களின் கவிதை நூலை வெளியிடுவதில் பெருமகிழ்வடைகின்றோம்.

17-11-1984ல் மட்டக்களப்பில் பிறந்த நிலாந்தி தனது பத்தொன்பது வயதில் இருந்தே கவிதைகள் எழுதிவருகின்றார். இவரது கன்னிக்கவிதை மித்திரன் வாரமலரில் “அந்திநிலா” என்ற புனை பெயரில் வெளியானது, ஆனால் அவர் அதனைத் தொடர்ந்து தனது படைப்புக்களை பிரசுர ரீதியில் வெளியிடுவதற்கான முயற்சிகளில் இறங்கவில்லை.

இராமனின் பதினான்கு வருட வனவாசத்தினைப் போன்று 2003களில் கவிதை எழுதத்தொடங்கிய இவரது கவிதைகள் பதினான்கு வருடங்களாக வீட்டுச்சிறையில் இருந்து இன்று வெளி உலகிற்கு வருகின்றது.

இவரது கவிதா ஆற்றல் குறித்து இவரது பெற்றோருக்கே தெரியவில்லை. கணவரும் அறிந்திருக்கவில்லை. தன் மன உணர்வுகளை, எழுத்தில் வடித்து தலையனைக்கு கீழே கட்டிக்காத்து வந்த இவரது கவிதைகள் இன்று பொது வெளியில் உங்களுடன் பேசவருகின்றது.

இதுதான் கவிதை என்று இதுவரை எவராலும் கவிதை பற்றிய தெளிவான ஒரு கருத்தினை முன்வைக்க முடியாத நிலையில் கவிதை செய்யுள், யாப்பு வடிவில் இருந்து மரபுக்கவிதை, புதுக்கவிதை, நவீன கவிதை, என பாய்ச்சல் காட்டிய படியே தனது பாதைகளை அது தானே நிர்ணயித்துச் செல்கின்றது.

உணர்ச்சிகளால் கட்டப்பட்டது கவிதை, இல்லை உணர்வுகளால் ஆட்கொள்ளப்பட்டதே கவிதை, அறிவுலக வெளிப்பாடே கவிதை, ஆழ்மனதேடலே கவிதை, சமுதாயத்தின் கண்ணாடி கவிதை, பிரபஞ்ச விசாலிப்பு கவிதை, இப்படி கவிதை தொடர்பான ஆயிரம் அர்த்தப்பாடுகள்.

இவற்றிற்கும் அப்பால் கவிதை தொடர்பான புரிதல்கள் பலவுண்டு, இந்த வரிசையில் தன்னைத் தனக்குள் தேடும் கவிதை தேடலில் தன் உணர்வுகளை, உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் ஒரு மொழி ரீதியான ஊடகமாக கவிதாயினி நிலாந்தி சசிக்குமார் தனது கவிதைகளைப் பார்க்கிறார்.

இவர் பெண்ணாக இருப்பதினால் காதல் உணர்வுகள் தொடர்பில் சமுதாய அவலங்களை ஒரு பெண்ணின் பார்வையிலும், பார்க்கும் பார்வையிலும் வித்தியாசம் தெரிகிறது.

உணர்ச்சி பூர்வமானது கவிதை என்றால் உணர்ச்சிகளின் குவி மையமாக திகழ்கிறது இவரது கவிதைகள், உணர்வுகளால் ஆனதே கவிதை என்றால் உணர்வுகளை வெளிப்படுத்துவதில் வெற்றி பெறுகிறது இவரது கவிதைகள்.

அறிவுபூர்வமானது சமுதாய நோக்குடையது கவிதை என்றால் இவரது பல கவிதைகள் இன்றைய சமகால நிகழ்வுகளுடன் சமுதாயத்தின் நலன் சார்ந்தும் இயங்குகிறது.

அந்த வகையில் இவர் கவிதையின் சூக்குமத்தை உணர்ந்தி ருக்கிறார். இவரது தொடர்ந்தேர்ச்சியான தேடல், தொடரான வாசிப்பு இவரது கவிதை வெளிப்பாட்டு உத்தியில் எதிர்காலத்தில் மாற்றங்களை கொண்டு வரவேண்டும். கொண்டுவரும் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

இது இவரது கன்னி கவிதைநூல் என்ற வகையிலும் மட்டக்களப்பின் ஒரு புதிய பெண்படைப்பாளி என்ற வகையிலும் இவரை கவிதை உலகிற்கு அறிமுகப்படுத்துவதில் மகுடம் பதிப்பகம் பெருமை கொள்கிறது.

**- வி. மைக்கல் கொலின்**
(ஆசிரியர் - மகுடம்)

# என் அஞ்ஞான வாசத்தின் இறுதி நாள்

என்னை பல பேருக்குத் தெரியும். ஆனால்
என்னாலும் கவிதைகள் எழுத முடியும் என்பது
என் குடும்பத்தினருக்கும் தெரியாது.
எனது புத்தகங்கள் மீதான காதல்
எப்போதும் தனிமையை நாடும்
என் தனிமை கவிதையில் சுகம் தேடும்
எனது கற்பனைகள் சக்கரம் கட்டி ஓடும்

என்னால் பிறந்த ஒவ்வொரு கவிதைகளையும்
எழுதி எழுதி மறைத்து வைத்தேன்
எப்போதும் எடுத்து படித்துப் பார்ப்பேன்
எனக்குள் நானே சிலிர்த்துக் கொள்வேன்

எப்போது இவற்றை வெளிக் கொணர்வது என்று
ஏங்கிக் கிடந்தேன்
ஏக்கத்தில் தினமும் தூங்கிப் போனேன்
என் பெற்றோருக்கும் காட்டாது
என் கணவருக்கும் சொல்லாது
என்னுடனே வைத்துக் கொண்டேன்
என் பெட்டியில் போட்டு பூட்டிக்கொண்டேன்.

எத்தனை வருடங்கள் ஓடின
என் கவிதைகள் என்னைச் சாடின
எப்படி இவற்றை வெளிக் கொண்டு வருவது
எங்கே இதைப் பற்றிப் பேசுவது
என்று அலைந்தேன்
என் முகநூல் தோழியைக் கொண்டு
எமது மகுடத்தின் ஆசிரியரைக் கண்டேன்

என்ன ஓர் ஆச்சரியம்
எனது கவிதைகள் அவருக்குப் பிடிக்க
எனக்கு ஒரு வாய்ப்பைக் கொடுக்க
என் கவிதைநூல் இன்று உங்கள் கைகளில்

என் கவிதைகளை வாழ வையுங்கள்
என்னையும் கொஞ்சம் தட்டிக்கொடுங்கள்
எப்போதும் இருப்பேன் நன்றியுடன்
எங்கேயும் செல்வேன் தன்னம்பிக்கையுடன்

இக்கவிதை நூலை அழகுற வெளியிடும் மகுடம் பதிப்பகத்திற்கும் அதன் உரிமையாளர் மகுடம் ஆசிரியர் திரு.வி.மைக்கல் கொலினுக்கும், நல்ல தொரு அணிந்துரை தந்து என்னை கவிதா உலகிற்கு அறிமுகப்படுத்தும் பேராசிரியர் செ. யோகராசா அவர்களுக்கும் எனது நன்றிகள்.

அன்புடன்
**நிலாந்தி சசிகுமார்**

# தாகம்

என் கைகள் துடிக்கின்றன
கண்கள் சொக்குகின்றன
தாகம்......
தாகம்......
பேனாவில் மையை ஊற்றுங்கள்
தொண்டையில் சிக்கிய கவிகள்
வெளியில் வந்து விழட்டும்



# கல்

வைரக் கல்லாக என்னைத்
தூக்கி உன் கையில்
வைத்தேன்
கூழாங்கல் லென்று என்னை
நீ தூக்கி
எறிந்தாய்
வைரக்கல்லா? கூழாங்கல்லா?
என் மனற்கேணி
கலங்கியது




# இருக்கிறேன்

**நா**ன் இருக்கிறேன்
இன்னும் உயிருடன்
புன்னகை சிந்தும் கண்ணீராக
கண்ணீர் வடிக்கும் புன்னகையாக
கலைந்த கேசமாக
களையிழந்த மாலையாக
மறைக்கப்பட்ட சூரியனாக
பகல் நேரத்து நிலவாக
கை கால்கள் கட்டப்பட்ட குழந்தையாக
இன்னும் நான் இருக்கிறேன்.

## கறை

அந்தியில் பூக்கும்
இந்த நிலாவில் கறைகளைப்
பூசியவர்கள்
அவர்களின் கறை படிந்த
கைகளையும்
சுமந்து கொண்டே
திரிகிறார்கள்





## விதை

நான் வைரமாகி விட
தவம் செய்கிறேன்
என்னை அடிக்கடி எழுப்பி
கரியாக்கி விடுகிறார்கள்

நானும் முளைத்து விடுவோம்
என முனைப்பாக இருக்கிறேன்
என்னை தோண்டி எடுத்து
மீண்டும் புதைக்கிறார்கள்

## தேடல்

தவத்தில் கூட எட்டாத
அமைதி
ஒரு நூலில் கிட்டியது
கூடலில் கிடைக்காத
சுகம்
ஒரு கவிதையில் எட்டியது


# சோகம்

**எ**ன் உயிரை உருக்கி
வார்த்தைகள் வடிக்கிறேன்
என் கண்ணீரை பேனா
மொழி பெயர்க்கிறது



# தெளிவு

**நீ** தானா?
என் வாசலில் வந்தது
உன் முதல் வரவில்
என் உடல் சிலிர்த்தது
இன்று என் இதயம்
சாவகாசமாய்த் துடித்தது
அன்று நீ எனக்கே என்று
நினைத்தேன்
இன்று நீ யாரோ எனத்
தெளிந்தேன்




# அமாவாசை நிலா

உன்னைக் காண்பதற்கு
என் கோடிக் கண்களைத்
திறந்து பூத்திருக்கிறேன்
தினகரா!
நீ என் முகம் பாராது
ஓடி விட்டாய்
நீ வரும் வழி பார்த்து
சில நாட்களில் காத்திருக்கிறேன்

என்னைக் கண்டு கொள்ளாது
அந்தக் கமலத்தை காதல்
செய்கிறாய்
என் ஒரு தலைக் காதலுக்காய்
ஒரு நாள் துக்கம்
அனுஷ்டிக்கிறேன்

# சிலுவைகள்

தாம் சுமந்து செல்லும்
சிலுவைகளில் தான்
தாம் அறையப்படப்
போகிறோம் என்று
அறியாமல் பாடசாலை
செல்லும் தேவதைகள்



# காதல்

கண்களை வாயாக்கியது
வாயை ஊமையாக்கியது
மௌனத்தை கவிதையாக்கியது
கவிதையை தாய் மொழியாக்கியது
அழகை ஆராதித்து
அறிவைக் கொலை செய்தது.




# காதல் விருட்சம்

சற்றென்று முளைத்து
வானைத் தொடும்
விதையைப் பார்த்ததுண்டா?
அவள் கண்ணிலிருந்து
என் உள்ளத்துள்
விழுந்த காதல் விதை
சற்றென உடல்
முழுவதும் வேர் ஓடி
மூளைக்குள் பூப்பூத்து
கண்களில் தேன் சொரிந்து
கவிதைகள் எனும் கனிகளைக்
கொட்டுகிறது.



# பக்தி

பக்தி கோயிலின்
வாசல் செருப்பானது
பெறுமதி வாய்ந்த செருப்பு
மனதில் நிறைந்து தெய்வமானது
ஆராத்திகள் பணக்காரனிடம்
பிச்சை எடுத்தது
தெய்வ மாலை பணத்திற்கு
சோரம் போனது
அருகில் இருப்பவர்கள்
நந்தனார் ஆனார்கள்
அம்மணிகள் அம்மனுக்குப்
போட்டியானார்கள்
ஆண்கள் அவசரக் கூட்டத்திற்கு
இடம் பிடித்தனர்
பகலில் பாதுகாப்பு இறைவனிடம்
இரவில் இறைவன் மனிதனின்
காவலில் வீட்டுக் கைதியாக..



# காமத்திற்கு பலியான சிறார்கள்

கிழங்கிற்காக சேற்றில்
புதைக்கப்படும்
தாமரைகள்

தண்டிற்காக மண்ணில்
சாய்க்கப்படும்
வாழைகள்

சிற்றின்பத்திற்காக
அழிக்கப்படும்
பேரின்பங்கள்




# தாய்மை

ஓர் அழுகையில்
என் புன்னகை
உச்சி மோர்ந்து
உதடு நனைந்தது
உனக்காக
என் முலைகள் சுரந்தது
உன் உதடு பட்டதும்
உள்ளங்காலில் இருந்து
ஓடிச் சென்றது குருதி
உனக்காக நிறம் மாறி
உரு மாறி வந்தது
உன்னைப் பார்க்கின்ற
உன் விழி சொல்கிறது
உப்பு சற்று தூக்கல் என்று
என் முலைகளுக்கு போட்டியாக
என் விழிகளும் சுரந்ததால்
அந்த சுவை வந்தது
உன் பிஞ்சு விரல் தொடுகையில்
என் தாய் தெரிந்தால்
நான் குழந்தையானேன்


# வாழுங்கள்

என்னுடனே போராடிக்
கொண்டிருக்கும்
என் கனவுகளே
நான் இறக்கும் போது
இறந்து விடாதீர்கள் நீங்களும்
என்னைப் போல் யாரேனும்
வருவார்கள்
உங்களை வாழ வைக்க



# குழந்தை

அது உன்னால் வந்தது தான்
ஆனால் என்னில் வந்தது
அது துளியாய் விழுந்து
என்னுள் கருவானதும்
அனைவரையும் தித்திப்பாக்கினேன்
என் காதலுக்கு கிடைத்த விருதென்று



# இறந்து பிறந்த குழந்தை

வாசனை இன்றிப் பூத்த மலரே - என்
வாசலில் விழுந்த சரமே
மலடி என்ற பட்டத்தைப் பறித்தாய்
தாய்மையை எனக்கு மறுத்தாய்
என் முலைகளில் வழியும் ஜீவனை
உன் சமாதியில் பெய்கிறேன்
உன் சின்னக் காலின் உதைப்பு - அது
என் கண்ணீரில் கரைந்த நினைப்பு
எத்தனையோ வரலாம் இனி - ஆனால்
உன் முதல் அசைவை மறக்குமோ
என் அடி வயிறு



# கடலும் நானும்

உன்னுடனே என் கவியரங்கம்
நீ அலைக்கரம் தட்டி ரசிக்க
எனக்குப் போட்டியாக கவியை
நுரையாக அள்ளித் தெளிக்க
எமது கவிதைகளின் அரங்கேற்றம்

நீ சொல்வதும் நான் சிலிர்ப்பதும்
நான் சொல்வதும் நீ ரசிப்பதும்
தென்றல் எம்மை முதுகு தட்டிப்
பாராட்டும்

நீ ரசிப்பது எத்தனை விதம்
நான் சிலிர்ப்பது எத்தனை தரம்
நம் கவிதைகள் எத்தனை ரகம்

உன் உக்கிரமான கவிதைகளில்
நான் பின் வாங்குவதும்
என் சோகமான கவிதைகளில்
நீ பின் தங்குவதும்

என் காலடி வரும் ஒவ்வொரு
பொழுதும்
உன்னை பிடிக்க எத்தனிக்கிறேன்
உன் தப்பிச் செல்லும் யுக்தியைப் பார்த்து
அசட்டுத் தனமாய் நான் சிரிக்கிறேன்

தனிமையில் நீ நண்டுகளுடன் ஆடும்
கண்ணாமூச்சி
இரவில் நிலவுக்குச் சொல்லும்
காதல் கவிதைகள்
இவற்றை ரசிக்க கொடுத்து வைக்க வில்லை எனக்கு

ஒவ்வொரு முறை நான்
வரும் போதும்
என் கனவுகளின் அஸ்தியை
உன்னிடம் கரைத்து விட்டுச் செல்வதே
எனக்கு வேலையாகிவிட்டது........



# மீண்டும் ஒரு காதல்

நீ வரவேண்டும் - மீண்டும்
என் நெஞ்சில் ஏக்கம்
ஆனாலும் -
விழிகளில் மருட்சி
புன்னகையில் கலப்படம்
மனசெல்லாம் தவிப்பு
ஏன் -
கடலில் இருந்து தப்பியவள்
அலையில் கால் நனைக்கப்
பயப்படுகிறேன்
கண்ணிவெடியில் சிக்கியவள்
சரவெடிக்கே பதறுகிறேன்
புயலில் மாட்டி எறியப்பட்டவள்
தென்றலுக்கும் ஒதுங்குகிறேன்



# தலையணை

அந்தரங்க தோழியே!
என் சந்தோஷத்து குழந்தையே
கண்ணீரில் நீ தாயாவாய்
என் ரகசியங்களுக்கு
செவியாவாய்
செல்லச் சண்டைகளுக்கும்
ஒத்திகைகளுக்கும்
கை கொடுப்பாய்
என் ராத்திரிகளும்
கண்ணீரும்
உன்னுடனே
நீ ஜடம் என்று
யார் சொன்னது
உன்னில் முகம் புதைத்து
நான் அழும் போது
அத்தனை விரல்கள்
முளைக்கும் உன்னில்
என்னை வருடி விட
நீ தலையணை அல்ல
எனக்கு தாயின் மடி

# பிறந்தவுடன் கொல்லப்பட்ட சிசு

**உ**ன் தொப்புழ் கொடி
அறுபடும் என்றிருந்தேன்
உன் உயிர்க் கொடியை
அறுத்தவர் யார்?

பிறந்த ஈரம் காயும் முன்னே
உன் குருதியால்
உன் உடல்
நனைத்தவர் யார்?




# அவதாரம்

**எ**ன் வாழ்வில் தோன்றும்
ஒவ்வொரு புயலுக்குப் பின்பும்
நான் பிறப்பெடுக்கிறேன்
மௌனம் எனும்
கருவறையில் நுழைந்து.



# கைம் பெண்ணின் புலம்பல்

தனிமையில் எரியும்
என் இரவுகளை
கண்கள் நீர் ஊற்றி
அணைக்கின்றன
உள்ளம் ஆசையில்
தகிக்கிறது
பெரு மூச்சு புயலாக
அதைக் கலைக்கிறது
எங்கெங்கோ அலையும்
என் எண்ணங்களை
என் குழந்தை தன் அழுகையில்
குவிக்கிறது




# சுதந்திரம்

பட்டாம் பூச்சியாக
ஆசைப்பட்டவள்
இன்றுவரை கூட்டுப்
புழுவாகவே வாழ்கிறேன்

காற்றுக் கூட கிளைகளை
அசைத்து தன் இருப்பைக்
காட்டிச் செல்கிறது
நானோ இன்னும் அசைவின்றி

சமுத்திரமும் அலைகளால்
தன் எதிர்ப்பை
சொல்லிச் செல்கிறது
நான் கண்ணசைத்து
சாடை பேசக்கூட பயப்படுகிறேன்



# நிலாக்கிண்ணம்

நட்சத்திர பூக்களின்
தேனையெல்லாம்
சேர்த் தெடுத்து
நிலாக்கிண்ணத்துடன்
காத்திருக்கிறது இரவு

அதைப் பருகாமலே
தூக்கம் எனும்
துக்கத்தில் மக்கள்
அதைப் பருகிப் பருகியே
போதையில்
கண்ணீர் வடிக்கிறேன்

கண்ணீரில் தத்துவங்கள்
கவிதைகளாகப்
பிறக்கின்றன.

# பிரசவம்


**சொ**ற்கள் என்னை கவியாக
வெளிக் கொண்டு வர
முக்குகின்றன
நானோ தொப்புள் கொடி
சுற்றிய குழந்தையாக
வெளிவர
மறுக்கிறேன்



# வாரிசு

**நா**ன் கங்கை மகள்
என்னுள் பிறந்த
ஒவ்வொரு கனவையும்
அக்கடலின் கையில்
ஒப்படைத்து விட்டு வருவதே
என் வேலை

அதை நிறுத்துங்கள்
ஏனெனில்
எனக்கு ஒரு
பிதா மகன் வேண்டும்.



# எமது உலகம்

மலர்ந்திருக்கும் பூவைப் பற்றி
எமக்கு கவலை இல்லை
மலர்ந்தும் மலராத பூவாகவே
திருப்திப்பட்டுக் கொள்கிறோம்

எம்மை வந்து பார்ப்பதற்கு
ஒரு கதவு
நாம் எட்டிப்பார்ப்பதற்கு
ஒரு யன்னல்
இதுவே எமது சுகமான
உலகம்




# விடியல்

எனக்குள் பலரும்
உரிமைச் சண்டை
பிடித்துக் கொண்டிருக்க
நான் மட்டும் அமைதியில்

இரைச்சல்களுக்கு மத்தியில்
நான் நிசப்தமாய் தவம்
செய்கிறேன்
நிசப்தமான பொழுதில்
என்னுள் இரைச்சல்
கலகம் செய்கிறது

இத்தனை நாளும்
என்வாழ்வில் வர மறுத்த
பகல் பொழுது
இன்று என்னை கேட்காமலே
வந்துள்ளது
இன்று தான் நான் விழித்திருக்கிறேன்



# அப்துல் கலாம்

இதோ!
ஒரு மனிதன்
மண்ணை விட்டு சென்று விட்டான்
விண்ணை எட்டிப் பிடித்து விட்டான்
சம்சாரம் அவனுக்கு பிடிபடவில்லை - எந்த
சமாச்சாரமும் அவன் அறியாமல் இல்லை

ஏவுகணை ஏவும் போது
நீ பார்வையாளன் தானே
ஏன் இதில் மட்டும் ஏறிக்கொண்டாய்

இது இறைவனால் உன்னை
ஏற்றிச் செல்ல வந்ததோ
உலகில் வாழ்வது எப்படி
என்று தெரிந்து கொள்ள
உன்னை அழைத்தானோ
செல் - அவனுக்கும் விளக்கம்
சொல்.

முடிந்ததும் உன் செலவிலாவது
வந்து விடு
உன்னை தன் வீட்டிலேயே
அடைத்து விடுவான்
இறைவன் பொல்லாதவன்

நீ இறுதியாகப் பேசிய பேச்சில்
இறைவனுக்கு சந்தேகம்
ஏதும் தலைப்பட்டதோ
கையோடு அழைத்து வர
எமனை அனுப்பினானோ

இராமேஸ்வரம் தண்ணீரில்
மூழ்கும் என்று தானே
சொன்னார்கள்
நீ அதை கண்ணீரில்
மூழ்கடித்து விட்டாய்

கலாம்
இருந்திருக்கலாம்
இன்னும் சில காலம்
இருந்திருக்கலாம்

நீ பிறந்தது சம்பவம்
இறந்தது சரித்திரம்
உலகம்
உள்ளவரை
உன் பெயர்
பெருமை கொள்ளும்.

# மரணம்

உன்னை காதலிக்கச் சொல்லி
என் பின்னே ஓடி வந்து கொண்டிருக்கும்
எனதன்புக் காதலனே!
உன்னை எனக்குப் பிடிக்கும்
ஆனால்
உன் தீவிர போக்கு
என்னை பயமுறுத்துகிறது
என் உடலை சிதறடிக்கதே
உடற் காயங்களை ஏற்படுத்தாதே

நான்
உன்னை சந்திக்க நினைப்பது
என் படுக்கையறையில்
நான் மட்டும் தனித்திருக்கும்
அந்த நிலாப் பொழுதில்
என் கண்களை சொக்க வைத்து
இதழ்களின் புன்னகை கசங்காமல்
அந்த துன்பம் போன்ற இன்பமான
வலியுடன்
உன்னை நான்
இணைய வேண்டும்
நாம் இணையும் அந்த
முனகல் சத்தம் கூட
நான்கு சுவரைத் தாண்டாமல்
இருக்கட்டும்

# தூரமான காதல்

**எ**ன் உள்ளத்தில் நீ இருப்பது
உண்மை
இல்லையென நான் சொல்வது
பொய்மை
என்னில் நீ இருந்தாய்
ஒளியாய்
நான் வைத்தேன் உன்னை
மறைவாய்
இதனால் யாருக்கு இலாபம்
இதற்கு ஏன் இவ்வளவு கோவம்

நாம் சேராதது உன் அதிஸ்டம்
நீ கிடைக்காதது என் துரதிஸ்டம்
நீ இட்டாய் புள்ளி
நான் போட்டேன் கோலம்
இடையில் வந்தது மதம்
இதனால் போனது சம்மதம்

உன் குடும்பத்திற்கு என்மேல் பாசம்
அதற்கும் போட்டியாய் என் தாய்ப் பாசம்
இதற்கிடையில் நான் போட்டேன் வேஷம்
இதனால் போனது என் காதல் நேசம்

இதற்கு மேல் தாங்காது தேகம்
இன்னும் என்மேல் சந்தேகம்
காதல் கை கூட வந்த நேரம்
காலம் வந்து பிரித்தது தூரம்

## குழந்தை

**நா**ன் இழத்த
இழுப்புக்கெல்லாம்
வருகிறது குழந்தை

நாம் செல்ல வேண்டியது
அதன் பாதையில்
தான் என்பதறியாமல்



## காதல்

**கா**தலைச் சொல்லுமாறு
நீ வற்புறுத்துகிறாய்
காதல் என்பது மௌன சாகரம்
என் பதறியாமல்

# காதலே!

**நா**னும் என் உயிரைத் தரத் தயார்
நீ யார் வாழ்விலும் இனி விளையாட
மாட்டேன் என சத்தியம் செய்தால்



# எனக்குள்

**எ**னக்குள் நுழைய
என்னாலேயே முடியவில்லை
எப்படி நுழைந்தாய் நீ?

# காற்று

உன்னில் இருந்து வெளியேறத்
துடிக்கிறேன்
நீயோ என்னை மூச்சுக்காற்றாக
உள்ளிழுத்துக் கொள்கிறாய்



# வயதுக்கு வந்தவன்

சோறூட்ட தாய்க்கு
கை வரவில்லை
கேட்க எனக்கு
வாய்வரவில்லை - ஏனெனில்
நான் வளர்ந்து விட்டேனாம்



# தனிமை

**உ**ன் காதல் அதிசயம் தான்
ஒரு கண்ணீர் தித்திப்பு
மறு கண்ணீர் உவர்ப்பு

நீ அற்புதமானவன் தான்
என் உதட்டில் புன்னகை
உள்ளத்தில் அழுகை

கடவுளையும் மிஞ்சி விட்டாய்
என் தனிமையில் நிறைந்திருந்து




# எங்கே என் வீடு?

என் வீட்டிற்குக் செல்ல
வழி சொல்லுங்கள்
எங்கே என் மௌனங்களுக்கு
விடை கிடைக்கின்றதோ
எங்கே என் கண்கள்.
கண்ணீரைக் குடிக்கின்றதோ
எங்கே என் புன்னகை
ஒளியை பரப்புகின்றதோ
எங்கே எனக்கு நானே
கட்டளை இடுகின்றேனோ
எங்கே என்மனம்
ஓய்வெடுக்கின்றதோ
அங்கே என் வீடு.

## குழந்தையானேன்

வெள்ளைப் புன்னகையிலும்
முகத்தை நனைக்கும் எச்சிலிலும்
துறும்பு செய்யும் பிஞ்சுக் கைகளிலும்
துறுகுறு பார்வையிலும்
என்னை மறந்து விட்டேன்
என் வயதைத் தொலைத்து விட்டேன்



## ஏழையின் குடில்

இன்று பௌர்ணமி
சற்று ஓலையை
பிரித்து விடு
இன்றாவது வீடு
ஒளி பெறட்டும்



# என்னை சிறைவிட்டீரே!

இறைவா!
ஏன் என்னை கை விட்டீர்?
கூண்டுக்குள் பூட்டி விட்டீர்
அதன் போக்கில் என்னை
செல்ல விட்டீர்
என் சிறகுகளை கருக்கி விட்டது
அதுவாக என்னை மாற்றி விட்டது
என்னைபறக்க விடுங்கள்

# பெண்

**ச**ற்று பலமாக
வீசிவிட்டேன்
நம்புங்கள் என்னை
நானும் தென்றல் தான்



# வெண்புறா

**ச**மாதானம் வரும் என்றனர்
காத்திருந்தேன் - இன்று
என் உயிர் காக்க
பறந்து செல்கிறேன்
சமாதானம் வந்தால்
சொல்லி அனுப்புங்கள்

# வாக்குப் பெட்டி

**க**ர்ப்பம் தரித்து விட்டேன்
என் வயிறு திறந்து
கொண்டு வாருங்கள்
ஒரு புதிய முகத்தை



# வேரின் வளர்ச்சி

**நி**லத் தாயின் கருப்பை
உணர்ந்தது
தன் ஒவ்வொரு பிள்ளையின்
அசைவையும்

# இரவின் காதலி

இரவையும் ஒருத்தி
காதலிக்கிறாளோ!
விடியும் போதில்
பிரிவுத் துயரில்
அவள் கண்ணீர்த்துளிகள்
பனித்துளிகளாக....




# குயில்

கூடு கட்ட
கற்றுத் தருமாறு
குருவின் வாசலில் வந்து
கூக்குரலிடுகின்றதோ
அதிகாலைக் குயில்


## முள்ளாகிய நீ

**நீ** முள் தான் என்பதை
ஒவ்வொரு முறையும்
நிருபித்துக் கொண்டு தான்
இருக்கிறாய்
நான் தான் உன்னைப்
பிடிங்கிப் போட்டபடி
மன்னித்துக் கொண்டிருக்கிறேன்.




## மனக்கவி

**ப**ல மலர்கள் கொண்டு
கட்டப்பட்ட மாலை நான்
எனை நாராக்கி ரசிக்கிறது
உன் மனக்கவி



# புரியாத உணர்வுகள்

என் உணர்வுகளை
நீ புரிந்து கொள்ளவில்லை
என்று தான் அவற்றிற்கு
உருவம் கொடுத்தேன்
அவை வார்த்தைகளாகின
வார்த்தைகள் கூட
உன்னை தாக்கி விடக்
கூடாதே என்று
அவற்றைக் கொண்டு
கவிதை செய்தேன்
உனக்கு கவிதை
இதமளித்தது உண்மை
ஆனால் அப்போதும்
என் உணர்வுகள்
உன்னை எட்டவே இல்லை



# ஏழ்மையின் தாலாட்டு


கண்ணா நீ தூங்கடா
அரிசி இல்லை பருப்பும் இல்லை
பசித்தால் தின்ன ஏதும் இல்லை
மார்பில் பாலும் இல்லை
என் கண்ணில் நீரும் இல்லை
கண்ணா நீ தூங்கடா

கையில் காசும் இல்லை
கனவுகளை விற்க வழியுமில்லை
கண்களில் தூக்கம் வரவும் இல்லை
கணவனும் துணைக்கு அருகில் இல்லை
கண்ணா நீ தூங்கடா

வானம் நமக்கும் சொந்தம்
விடியல் நமக்கும் உண்டு
காலம் ஒரு நாள் மாறும்
சூரியன் நம்மை பார்க்கும்
கண்ணா நீ தூங்கடா

## நான் நீ

**நா**ன் நிலா
நீ சூரியன்
நான் மறைந்து வாழ்கிறேன்
நீ மறந்து திரிகிறாய்



## பறத்தல்

**கா**ல் விலங்கு இழுக்க
கை விலங்கு கனக்க
கற்றுக் கொடுக்கிறேன் பறக்க......

## பார்வை

உன் பார்வை
ஒரு பனித்துளிதான்
அதையும் தாங்க முடியாத
அறுகம் புல் அல்லவா நான்



## கூடல்

காமனின் உற்சவத்தில்
எச்சில் பிரசாதமோ
வியர்வை தான் தீர்த்தமோ

# பிரிவு

உனக்கு திருமணம்
நடந்து விட்டதா?
உன் அழைப்பிதழை
பார்க்க விடவில்லை
என் கண்ணீர்




# வியாபகம்

கண் திறந்தால் கண்ணீராய்
கண் மூடினால் கனவாய்
பேசும் போது வார்த்தையாய்
கவி பாடினால் கருவாய்
எங்கும் நீ தான்
எதிலும் நீ தான்.


# இருண்ட வானம்

என் வானில்
நீ பௌர்ணமியாக
ஒளிரும் போது
உன்னை சந்தித்தேன்
நீ என் வானிற்கு
அமாவாசைகளை
மட்டுமே
தந்து கொண்டிருக்கிறாய்.



# மனம்

மனதில் கனமுண்டு
இதயத்தின் வேகம்
உணர்த்துகிறது
இதயத்தில் வலியுண்டு
புன்னகை மறந்த உதடு
காட்டுகிறது
புன்னகையில் சோகமுண்டு
கலங்கும் விழிகள்
சொல்கிறது
விழிகளில் கண்ணீருண்டு
காதல் பிரசவிக்கிறது
காதலில் ரணம் உண்டு
மனம் வலிக்கிறது.



# வெற்றி

எம் நாட்டுப் பெண்களின்
கூந்தல் மலரைப்பறித்து
உம் மனைவியர் குழலை
அலங்கரித்தீர்கள்

எமது சுமங்கலிகளின்
குங்குமம் எடுத்து
உமது பெண்களின்
வகிட்டில் தீட்டினீர்கள்

எங்கள் குழந்தைகளின்
பொம்மைகள் பறித்து
உங்கள் குழந்தைகளுக்கு
விளையாட்டுக் காட்டினீர்கள்

இது தான் உங்கள் வெற்றி
என்றால் நாங்கள் தோற்றது
உண்மையே

## நான்

என்னை விட
என் கவிதைகள்
எவ்வளவோ பேசும்
ஏனென்றால்
என் பேச்சிலும்
என் எழுத்துக்கு
ஏனோ தைரியம் அதிகம்



## சூரியோதயம்

இரவில் திருட்டுத்தனமாக
அல்லியுடன் காதல் செய்யும்
அம்புலியை பிடிக்க வருகிறாள்
ஒளி விளக்குடன் ஞாயிற்றுப் பெண்

## போலி

உன்னைக் கண்டதும்
இன்பமழை எனச்
சிலிர்த்து நின்றேன்

நீ மேக வேஷமிட்ட
புகை என்பதை
அறியாமல்



## சிசு

என்னைத்
தாயாக்கிய நீ
என் தாயைத்
தொலைவாக்கியது ஏன்?

# மாதவி

அவளின் தொழில் தாசி தான்
அவள் நடனம் ரசிக்கப்பட்டது
அவள் யாராலும் ருசிக்கப்படவில்லை

கோவலன் மனம் கவர்ந்தாள்
கண்ணகி பற்றி தான் மறந்தான்
மாதவியின் அன்பில் விழுந்தான்

இவளை அலங்கரிக்க
அவளை அவலப்படுத்தினான்
இவள் அலங்கரித்ததும்
அவள் அலங்கோலமாய் நின்றதும்
கோவலனுக்காகவே

கணவனைப் பிரிந்தாள்
கண்ணகி
காதலனைப் பிரிந்தாள்
மாதவி

பிரிவைத் தவிர
எதையும் தியாகம்
செய்யவில்லை
கண்ணகி

பிரிந்ததால்
தன் குலத்தொழிலையே
விட்டாள்
மாதவி

# விரக்தி

உன்னை எண்ணி
தூங்காமல் தேம்பும்
என் இதயத்திற்கு
உருக்கமாக தாலாட்டுப்
பாடுகிறது
என் கண்கள்



# முடிவு

ஒவ்வொரு முறையும்
நீ பேசும் பேச்சுக்களுக்கு
முற்றுப் புள்ளி வைப்பது
உன் முத்தமே

# தனிமை

இரவின் தனிமையில்
மெழுகுவர்த்தியுடன்
என் இதயமும்
உருகியது
கண்களும்
பெருகியது



# மௌனம்

இருவரும் பேசிய
வார்த்தைகளில்
புரியாத காதல்

ஒரு நாள் நீ
பேசாத போது
புரிந்தது

# திருமணம்

**கா**தலர்களாக
இருக்கையில்
சுவீகாரம்
எடுத்த
காதலை
கல்யாணமானதும்
கொலை செய்வதா?




# மாற்றம்

**எ**ன்னை குழந்தையாக்கியது
உன் காதல்
என்னை அழகாக்கியது
உன் கவிதை
என்னைத் தாயாக்கியது
உன் குழந்தை

## அதிசயம்

**கா**தல் ஓர்
அதிசய உலகம்
காதலர்களை
குழந்தைகளாக்கி விடும்



## கவிதைக்காதல்

**எ**ன் கவிதைகளுக்கு
நீ கருவான போதே
உன் காதலியாக
நான் உருமாறி விட்டேன்

# சரணாகதி

உணர்ச்சிகளுக்கு
உருவம் கொடுத்து
என்னை அனுப்பிய
இறைவன்
அவற்றைக் கட்டுப்படுத்த
உன்னை அனுப்பினான்



# கல்லறைக் கவிதை

சந்தோஷப் படுங்கள்
இப்போது தான்
இவள்
அவளாக இருக்கிறாள்
என்று.....




# முறிந்த காதல்

புன்னகை எனும் நீர் சிந்தி
வளர்த்தெடுத்தேன் காதல் செடி
பூத்து வந்த மலரைப் பறித்து
வளைந்த கூந்தலில் சூடினேன்

பாங்காக வந்து மலர் சேற்றிலே விழுந்தது
வருந்தாமல் நான் எடுத்தேன்
பதறாமல் அதைத் துடைத்தேன்
வருடியதில் இதழ்கள் உதிர்ந்தனவே

பட்டுப் போன என் உசிரு இன்று
விழிநீர் சிந்தக் காத்திருக்கிறது
பழைய மலரை மீண்டும் பெற முடியுமா?
வழியில் நான் பெற்ற காதல் செடியே



# ஈரம்

**வி**ழியின் ஓரம் சிறு துளி
இதழின் ஓரம் குறு நகை
வழியின் ஓரம் நீ நிற்கையில்
காதலின் ஈரம் என் இதயத்தில்

# உத்தியோகம்

காலத்தின் கட்டாயம்
காத்திருந்தேன் வேலைக்காய்
திருமணம் முடிந்தது
திங்கள் பல கடந்தது
முத்தாகப் பிள்ளை வந்து
மூன்று மாதமானது

காத்திருந்த காலமும்
கடதாசியில் வந்தது
போட்டதெல்லாம் போட்டபடி
போராட்டம் மனதில் வர
சுவரோரம் சுருண்டு விட்டேன்
சிற்பம் போல நானிருந்தேன்
வெளியூரில் வேலையாம்
வெளிக்கிட்டு எனை வரட்டாம்

ஓடித்தான் போயிரலாம்
ஒருத்தியாக நானிருந்தால்
புருஷனையும் பிரிஞ்சிரலாம்
பிள்ளையை நான் என்ன செய்வேன்

எல்லோரும் சொன்னார்கள்
என் கணவரோடு சேர்ந்து
உத்தியோகம் முக்கியம்
ஊரவிட்டுப் போ என்று
பிள்ளைய நாங்க பாத்துக்கிறம்
பிறகென்ன கவலை என்றார்
விடுமுறைக்கு வந்தால்
விருப்பம் போல இருந்துட்டுப் போ


உன் அம்மா பாத்துக்குவா
உனக்கு வேண்டாம் கவலை என்றார்.

வெளியூரும் வந்து விட்டேன்
வேலைக்கும் சேர்ந்து விட்டேன்
தினம் தினம் நினைச்சுக்குவேன்
திடீர் என்று முழிச்சுக்குவேன்
எழும்பி குந்திக்கொண்டு
ஏங்கி ஏங்கி நான் அழுவேன்

பார்த்துச் சிரிச்சிருப்பா
முத்த மழை பொழிஞ்சிருப்பா
குப்புறத்தான் விழுந்திருப்பா
கூட இருந்து பாக்கலையே

சுரத்த பால் கட்டிக்கும்
சுவைக்க பிள்ளை இல்லை
கொடுக்கத்தான் வழியில்ல
கறக்கவும் தெரியல்ல
பாரம் தாங்காது தனம் கடுக்குது
பிள்ளையை நினைத்து கண்கள் சுரக்குது

பசித்தால் பிள்ளைக்கு
பெட்டியில பால் இருக்கும்
மார்போட வழியும் பால்
மறு பிறப்பில் தான் கிடைக்கும்



# சூரிய குடும்பம்

சூரியனுக்குப் பிறந்தவைகளோ
நிலவுத்தாய் பெற்றவைகளோ
எத்தனை கோடி வருட தாம்பத்தியம்
அதுதான் லட்சக்கணக்கில் பிள்ளைகள்

தாயைச் சுற்றிப் துயில்கின்றன இரவில்
தந்தைக்குப் பயந்து மறைகின்றன பகலில்

தாய் தண்மையாய்ப் பேச
தந்தை வெம்மையை வீச

இரண்டும் கலந்து பிறந்து விட்டன
இலட்சக்கணக்கில் நட்சத்திரப் பிள்ளைகள்

தாலாட்டுப் பாடிக் கொண்டே
நிலவு தூங்க
தூங்காமல் கண் சிமிட்டும்
துடிப்பான மழலைகள்

கணவனுக்கு
காலம் பூராவும் கடமைதான்
காலை தொடங்கி மாலை வரை
இரவிலும் வருவதில்லை
உல்லாசம் எல்லாம் வெளியில்தான்

மனைவி
வீட்டிலேயே தான் இருப்பாள்
விடியும் மட்டும் காத்திருப்பாள்
மாதத்தில் ஒரு நாள்
மாதவிலக்கு வரும்
வீட்டுத் தூரம் இருந்து
விட்டதும் வந்து விடுவாள்

இரவிலே அவள் தோழி
அல்லியும் உடனிருப்பாள்
கணவனின் கள்ளத்தனம்
காதிலே ஓதி வைப்பாள்

கமலத்துடன் காதலாம் - சூரிய
காந்தியுடன் கூடலாம்
மல்லிகை மணப்பதற்காம்
முல்லைக்குத் தூதாம்
இதனால் தான் வருவதில்லை
இங்கு நான் பிள்ளைகளுடன்
இரவு இரவாய் அழுதிடுவாள்
இமை மூடி யோசிப்பாள்
பகலிலே ஒரு நாள் -


பக்கத்தில் இருந்து பார்க்க
பக்கத்தில் இருந்துமென்ன
பார்வையில் படவே மாட்டாள்
தினம் இரவில் அழுகை தான்
திரண்ட கண்ணீர் நிலம் பரவும்.

இரவில் வேர்த்ததோ
இல்லை பசியில் பிள்ளை அழுததோ
கோலம் போட நீர் தெளித்தாளோ
காயத் தலையைப் பிழிந்தாளோ
இப்படிப் போகும் அவன் எண்ணம்
இத்தனைக்கும் அவளைக் கேட்க மாட்டான்.
பூமித்தாய் சண்டைக்குப் போவாள்
புருஷனை அவள் மறைப்பாள்
சமரசத்திற்கு அவன் வந்தாள்
சம்சாரத்தை தாய் மறைப்பாள்

இப்படியே ஓடுது காலம்
இணைந்திட ஏது பாலம்
காலம் பூராவும் இதுதான் வாழ்க்கை
காவல் செய்வாள் பிள்ளைகளின் கூட்டை

# பூவுக்குத் தெரியாது

**கோ**யிலோ கல்லறையோ
பூக்க மறப்பதில்லை பூக்கள்
கல்லறையில் பூத்த
பூவென்று மறுப்பதில்லை வண்டுகள்




# வியர்வைப்பூ

**நி**லத்தை உழுகிறான் விவசாயி
என்ன அதிசயம்
அவன் உடல் பூக்கிறதே

# வேட்டை

மனிதன் ஒரு கைதேர்ந்த
வேடன் - சக
மனிதனை மிருகம் போல்
வேட்டையாட




# வரமா? சாபமா?

பெண்ணாக வரமளிக்கப்பட்டவள்
இன்று
ஆணாக சாபம் கேட்கிறேன்

# காமம்

**ச**ட்டெனப் பற்றிக்கொள்ளும்
காட்டுத்தீ
சிந்தனையைப் பற்றிக் கொல்லும்
காயத்தீ




# பொருளாதாரம்

**வா**ழ்க்கைக்கு பொருள் ஆதாரம் தான்
பொருளா? தாரமா? எனும் போது
பொருளாதாரம் தானே முன் நிற்கிறது.

# காதல் தேசம்

**வா**ழ்க்கை ஒரு
சமுத்திரம் தான்
அதில் பெர்முடா தான்
காதல்




# கவிதை

**ம**னிதரினால் மனிதர்களுக்காக
ஓதப்பட்ட வேதம்
மழையைப் போல் கொட்டிவிடுவதில்
கவிஞர்களுக்குள் ஏது பேதம்?

# தேடல்

**வா**ழ்க்கை எனும் காட்டில்
தேடிக் கொண்டே
இருக்கிறேன்
வாழ்வுக்கு அர்த்தம்
கொடுக்கப் போகும்
என் உயிரின் மீதியை



# குருதித் தாய்

**கு**ண்டடி பட்டு விழுந்த
தாயின் மடியில்
தவழ்கிறது குழந்தை
அதற்குத் தெரிந்ததெல்லாம்
பசிக்கு பால்
தூக்கத்திற்கு இதமான சூடு
இரத்தத்தில் தோய்ந்து
ஈரம் கசியும்
மார்பைப் பார்க்கிறது
பால் தான் என்று
குடிக்கிறது. பசியடங்க
குருதியின் சூடு இதமளிக்க
உறக்கமும் வருகிறது

# சுனாமி

கடல் நடத்திய வன்முறையில்
மூச்சு முட்டித்தான் போனது உலகம்
இப்படி ஒரு கொடூரமான தாக்குதலை
எதிர் பார்க்கவில்லை யாரும்

காலை வருடி விட்ட அன்பு
தலை கோதிய பரிவு
சாய மடி கொடுத்த பாசம்
கவிதை எழுத வைத்த காதல்
எங்கே போனது
இவையெல்லாம்?
உன்னிடம் நிச்சயமாக
எதிர்பார்க்கவில்லை

கொலை செய்தாய்
சிசுவென்றும் பார்க்காமல்
கொள்ளையிட்டாய்
ஏழையின் குடிசையில் கூட
துகிலுரிந்து மான பங்கப்படுத்தினாய்
பெண்களை
அப்பப்பா....
வன்முறை செய்வதென்றானதால்
உனக்கு மண், பெண்
தெரியவில்லை போலும்.

நீ செய்த அட்டூழியத்தை
மறந்து மன்னித்து
உன் மடி தேடி
வருகிறதே உலகம்
வெட்கமாயில்லை
உனக்கு...?

# வீரத் தாய்

அவனோ? இவனோ?
என் மகனே!
எங்கே கிடக்கிறாயடா நீ?
அன்னை மனமோ பதற
பிணங்களின் நடுவே தேடுகிறாள்
போர்க்களத்தில்

அந்தோ! பரிதாபம்
அவள் காலில் இடறுகிறான்
அவள் பெற்ற செல்வ மகன்
அம்மா என்று அழைத்த
உதடுகளில் உணர்வில்லை
என்றும் பார்க்கத் தூண்டும்
அவன் விழிகளில் ஒளியில்லை
அதைப் பார்க்கும் எண்ணமும்
அவளுக்கில்லை
பதற்றத்துடன் தேடுகிறாள்
குண்டு பாய்ந்த காயத்தை

அவளின் கண்கள் கண்டது காயத்தை
அவளின் முகம் கொப்பளித்தது கோபத்தை
காயம் இருந்தது முதுகில்
காயம் பட்டது அவள் நெஞ்சில்

பத்துத் திங்கள் பத்தியம் செய்து
பெற்ற மகனை
அள்ளி வீசினாள் ஒரு நொடியில்
கோழையைப் பெற்றவளோ நான்
கோழைத்தனம் தெரிந்திருந்தால்
அன்று நின்றிருப்பேன்
உனக்குப் பதில் நான்
திரும்பியும் பாராமல் வந்த வழி
சென்றாள்
தமிழ் மண்ணில் விளைந்த மாவீரத்துடன்



# முற்றுப்பெறாத கவிதைகள்

முற்றுப்பெறாத கவிதைகள்
வற்றி விடாத கற்பனைகள்
நிறைந்த கனவுகள்
நிறைவேறாத ஆசைகள்
பாடவேண்டிய பாடல்கள்
ஓட்டத்துடன் கூடிய தேடல்கள்
இத்தனை இருந்தும் அடங்கி
விட்டது வாழ்க்கை
நான்கு சுவர்களுக்குள்



மட்டக்களப்பில் பிறந்த நிலாந்தி தனது பத்தொன்பது வயதில் இருந்தே கவிதைகள் எழுதிவருகின்றார். இவரது கன்னிக்கவிதை மித்திரன் வாரமலரில் "அந்திநிலா" என்ற புனை பெயரில் வெளியானது,

தன்னைத் தனக்குள் தேடும் கவிதைத் தேடலில் தன் உணர்வுகளை, உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் ஒரு மொழி ரீதியான ஊடகமாகவே கவிதாயினி நிலாந்தி சசிக்குமார் தனது கவிதைகளைப் பார்க்கிறார்.

இவர் பெண்ணாக இருப்பதினால் காதல் கவிதை உணர்வுகள் தொடர்பிலும் சமுதாய அவலங்களை ஒரு பெண்ணின் பார்வையில் பார்க்கும் பார்வையிலும் வித்தியாசம் தெரிகிறது.

இவரது தொடர்ந்தேர்ச்சியான கவிதைத் தேடல், தொடரான வாசிப்பு இவரது கவிதை வெளிப்பாட்டு உத்தியில் எதிர்காலத்தில் மாற்றங்களை கொண்டு வரவேண்டும். கொண்டுவரும் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

மகுடம். வி. மைக்கல்கொலின்
ஆசிரியர் - மகுடம்

நிலாந்தி சசிகுமார்

9 789554 041097

மகுடம்